பக்கங்கள்: 12
விலை : 30/-
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 19 வெள்ளிக்கிழமை 03.07.2020 கதிர் 240

### இனிது ரகசியம் அல்ல!

'வேலிக்கு ஓணான் சாட்சி' என்பார்கள். அதுபோல ஒரு விடயத்துக்குத் தமிழ் ஊடகப் பிரதானிகளை சாட்சியத்துக்கு அழைத்திருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று முன்தினம் காலையில் தமிழ் ஊடகங்களின் பக்கம் 02 >>>

# நிபந்தனை அரசியல் எங்களிடம் சரிவராது!

## மஹிந்த திட்டவட்ட அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 03

**எங்கள் அரசுக்கு நிபந்தனைகளை விதித்து எதனையுமே பெற்றுவிட முடியாது.**

**– இப்படிக் கூறியிருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.**

**வடக்கு மக்களின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதியை தெரிவு செய்ய முடியும் என்பதை தெற்கு மக்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.**

பக்கம் 02 >>>

## கொழும்பில் 'கொரோனா' ஜிந்துப்பிட்டி வீதி முடக்கம்

### சமூகப் பரவல் அல்ல என்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, ஜூலை 03

கொழும்பு – 13, ஜிந்துபிட்டியில் கொரோனா வைரஸ் நோயாளி ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதையடுத்து அதிரடியாகச் செயற்பட்ட அரசு கொழும்பு, ஜிந்துப்பிட்டி வீதியைத் தற்காலிகமாக மூடியுள்ளது.

எனினும், இது சமூகப் பரவல் அல்ல என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. ஆனாலும், அந்தப் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் பக்கம் 11 >>>

## யாழ்.இந்துவுக்கு அருகே இரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல்!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 03

யாழ். நகரை அண்டி – யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள ஒரு வீட்டின் மீது, நேற்றிரவு பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்திய குழுவினர், அங்கிருந்து தப்பிச் சென்றவேளை வீட்டு கேற்றை வாளால் வெட்டி விட்டுச் சென்றுள்ளனர்.

ஆறு மோட்டார் சைக்கிள்களில் வந்த சுமார் பத்துக்கும் மேற்பட்ட இனந்தெரியாத நபர்களே இந்த நாசகாரச் செயலில் ஈடுபட்டனர் என அந்தப் பகுதியில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் வீட்டுக்குப் பெரும் சேதமெதுவும் ஏற்படாதபோதிலும், கேற்றின் முன்புறம் வாளால் வெட்டிச் சேதமாக்கப்பட்டுள்ளது. சம்பவத்தையடுத்து அந்தப் பகுதி பக்கம் 11 >>>

## அரசியல் தீர்வு கிடைத்தாலே அபிவிருத்தியைக் காணலாம்

### திருமலையில் சம்பந்தன் தெரிவிப்பு



(அப்துல் சலாம் யாசீம்)

அரசியல் தீர்வு கிடைத்தால் மாத்திரமே அபிவிருத்தியை நோக்கிச் செல்ல முடியும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோண பக்கம் 02 >>>

## குவைத்திலிருந்து வந்த 5 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஜூலை 03

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

குவைத்தில் இருந்து வருகை தந்த மேலும் 5 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசதகவல்திணைக்களபணிப்பாளர் பக்கம் 02 >>>

## தமிழகத்திலிருந்து படகில் யாழ்.வந்த நபரால் பரபரப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 03

தமிழகத்தில் இருந்து படகு ஒன்றின் ஊடாக நேற்று தீவகம் வேலணைக்கு வந்திறங்கிய ஒருவர் அப்பகுதி மக்களின் முறைப்பாட்டை அடுத்து கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோய் தீவிரமாகப் பரவி வரும் நிலையில் அங்கிருந்து பக்கம் 11 >>>

### உலகக் கிண்ண ஆட்ட நிர்ணய சதி:

## சங்கக்காரவிடம் நேற்று 9 மணி நேரம் விசாரணை

### இன்று மஹேலவுக்கு அழைப்பு



கொழும்பு, ஜூலை 03

விளையாட்டு தொடர்பான குற்றங்களை விசாரணை செய்யும் பிரிவில் நேற்று முன்னிலையான இலங்கை கிரிக்கெட் அணியின் பக்கம் 02 >>>

## கிரிக்கெட் வீரர்களைப் பாதுகாக்க அனைவரும் அணிதிரள வேண்டும்

### ஹரீன் பகிரங்க அழைப்பு



கொழும்பு, ஜூலை 03

தமது இயலாமையை மறைப்பதற்காகவும் நாட்டுப் பிரச்சினையை மறைப்பதற்காகவும் இலங்கை கிரிக்கெட் வீரர்களுடன் அரசியல் செய்ய வேண்டாம் என அரசிடம் கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் கிரிக்கெட்டை அரசியலாக்க முயற்சிக்கும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றுபட முன்வரவேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் வேட்பாளரும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சருமான பக்கம் 02 >>>

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொறுப்பாளர்களை காலை போசனத்துடன் பிரதமர் சந்தித்தார் என்பது தெரிந்ததுதான்.

புதனன்று சந்திப்பின் போது தமது உரையை ஆரம்பித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ –

*“1977 இற்குப் பிறகு வடக்கில் எமது அரசுதான் - 2010 முதல் 2015 வரையான காலப்பகுதியில் பெரும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தது. அதைக் கூட நல்லாட்சி அரசு தொடரவில்லை ”* என்றார்.

அச்சமயம் வடக்கில் இருந்து இச்சந்திப்புக்காக நான் உட்பட விரல் விட்டு எண்ணக் கூடிய சில ஊடகப் பொறுப்பாளர்களே பிரசன்னமாகியிருந்தோம்.

பிரதமரின் ஆரம்ப உரை. இடையில் யாரும் குறுக்கிடுவது பொருத்தமற்றது. தலையாட்டி செவிமடுத்துக் கொண்டிருந்தோம். அவரது சிங்கள உரையை சிங்களம் புரியாதவர்கள் சம நேர மொழி பெயர்ப்பை ஒலி வாங்கியில் செவிமடுத்தனர்.

பிரதமரின் உரை முடிந்ததும் செய்தியாளர்களின் கேள்வி – பதில் இடம்பெற்றது.

1977 இற்குப் பிறகு அவரது அரசுதான் 2010 – 2015 இற்கு இடைப்பட்ட காலத்தில் வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கையை முன்னெத்தது என்ற கருத்தை யாரும் கேள்விக்கு உட்படுத்தவில்லை.

அத்தோடு அந்த விடயம் முடிந்தது.

நேற்று மாலை பத்தேகமவில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய பிரதமர் –

*“1977 இற்குப் பிறகு வடக்கில் அபிவிருத்தி வேலைகளை எமது அரசே முன்னெடுத்தது. இதனை நேற்று (புதனன்று) என்னைச் சந்தித்த வடபகுதி ஊடகவியலாளர்களிடம் கூறினேன். அவர்களும் அதை ஒப்புக்கொண்டார்கள்”* என்று அங்கு அறிவித்தார்.

இதுதான் ‘வேலிக்கு ஓணான் சாட்சி’ என்பதா?

★ ★ ★

தேர்தலை ஒட்டித் திடீர் திடீரெனப் பொலிஸாரும், தேர்தல் திணைக்களமும் அறிவிக்கும் விதிமுறைகள், ஒழுங்குகள் வேட்பாளர்களையும் பொது மக்களையும் மலைக்க வைக்கின்றன.

தேர்தல் பிரசாரத்துக்குக் கட்சியின் தொப்பிகள்,வேட்பாளர் இலக்கம் பொறிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள், ரீசேட்டுகள், Key Tags, கைலேஞ்சிகள், சிறிய கலண்டர்கள் என்று பல விடயங்களும் பொறித்து விநியோகிக்கப்படுவது வழமை. கட்சிப் பொதுக் கூட்டத்தில் கட்சியின் தொப்பியையோ அல்லது அந்தப் பொதுக் கூட்டம் நடத்தும் வேட்பாளரின் இலக்கம் பொறிக்கப்பட்ட ரீசேட்டையோ, அல்லது அவரது இலக்கம் மற்றும் படம் பொறிக்கப்பட்ட தொப்பிகளையோ அணிந்து செல்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

அப்படியானால் வேட்பாளர் படமோ, இலக்கமோ பொறிக்கப்பட்ட முகக் கவசத்துக்கு எந்த அடிப்படையில் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது? எழுந்தமானமாக பொலிஸ் தரப்போ,தேர்தல் திணைக்களமோ, தேர்தல் ஆணையமோ தம்பாட்டில் இந்த முடிவை எடுக்கின்றனவா?

அப்படி இல்லையாயின் எந்தச் சட்ட ஏற்பாடுகள், ஒழுங்கு விதிகளின் கீழ் இத்தகைய முடிவுகளை எடுக்கப்படுகின்றன, யார் அந்த முடிவை எடுக்கின்றார்கள் என்ற விடயங்களை விவரமாக வெளியிட்டால் பிரயோசனமாக இருக்கும்.

அதை விடுத்து எழுந்தமானமான அறிவிப்புக்களை விடுப்பது மக்களைக் குழப்பவே செய்யும்.

சமூகஊடகங்களில்–இணையத்தளங்கள், முகப் புத்தகங்கள், தொலைக்காட்சிச் சேவைகள், கேபிள் இணைப்புக்கள் ஊடாக எல்லாம் தேர்தல் பரப்புரைக்கு அனுமதித்துள்ளனர்.

இந்தத் திரைகளில் எல்லாம் விளம்பரங்களுக்கு, தேர்தல் பரப்புரைகளுக்கு இடமளித்தவர்கள் திரையரங்குகளின் திரைகளில் அதனைச் செய்வத்குத் தடை போட்டிருக்கின்றார்கள்.

ஏதேனும் ‘டச்சுக் கால’ தேர்தல் சட்ட விதிகளை அதற்குக் காரணம் காட்டக் கூடும். ஆனால் மாறி வரும் நிலைமைகளுக்கு ஏற்ப விதிமுறைகளையும் நெறிப்படுத்த வேண்டும் அல்லவா?

சமூக இடைவெளி பேண வேண்டும் என்பதற்காகப் பல புதிய, புதிய கட்டுப்பாட்டுகளைக் கொண்டு வந்திருக்கும் சுகாதார அமைச்சும், அதைப் பின்பற்றி உத்தரவுகளை விடுக்கும் தேர்தல் ஆணையமும், மக்களின் அதிக பங்களிப்புக்கும், ஜனநாயக ஈடுபாட்டுக்கும் வழி சமைக்கும் விதத்தில் அணுகுமுறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

கண்ணை மூடிக் கொண்டு விதிமுறைகளை அறிவிக்கும் அத்தரப்பினர், முழு மக்கள் பங்களிப்புடன் – அதே சமயம் சுகாதாரப் பாதுகாப்பையும் பேணியபடி – ஒரு தேர்தலை நடத்துவதற்கான யதார்த்த பூர்வ அணுகுமுறைகளைப் பின்பற்றுபவர்களாகத் தெரியவில்லை. அது நாட்டின் துரதிஷ்டம்...!

– மின்னல் –

---

## குவைத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாயகம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2066 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று மேலும் 79 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் குணமடைந்தோரின் எண்ணிக்கை 1827 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

---

## அரசியல் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மலை மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்விதமான அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை என மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றது எனக் கூட்டமைப்பின் தலைவரிடம் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் தெரியப்படுத்தியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் உறுப்பினர்களாகச் செயற்பட்டு வருகின்றவர்கள் மக்களுக்குத் தேர்தல் பற்றிய விடயங்களைத் தெரியப்படுத்துவதுடன், தெளிவுபடுத்தவும் வேண்டும்.

அரசியல் தீர்வு கிடைத்தால் மாத்திரமே அபிவிருத்தியை நோக்கிச் செல்ல முடியும் என்று மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டும்.

இம்முறை ஒரு வித்தியாசமான தேர்தலாக இருப்பதால் தமிழ் மக்களுடைய வாக்குகளைச் சிதறடிக்காமல் அனைத்து தமிழ் பேசும் மக்களும் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க உரிய வழிமுறைகளை அமைத்துக் கொடுக்க வேண்டும். மற்றக் கட்சிகளுக்கு வாக்களித்து தமிழ் மக்களுடைய வாக்குகளைச் சிதறடிக்காமல் ஒரு தாய் பெற்ற பிள்ளைகள் போல் செயற்பட வேண்டும். இதை மக்களிடம் தெளிவாகக் கூறுங்கள் – என்றார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள், திருகோணமலை நகர சபையின் தலைவர் இராஜநாயகம், திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் தவிசாளர் கலாநிதி டாக்டர் ஞானகுணாளன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## கிரிக்கெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

இலங்கைக்கு சிறந்த நற்பெயரைப் பெற்றுத்தந்த விளையாட்டு வீரர்களைப் பழிவாங்க மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பாக நாங்கள் கவலையடைகின்றோம். 2011இல் இடம்பெற்ற சம்பவம் ஏன் திடீரென வெளிப்பட்டது. குறுகிய நோக்கத்துக்காக விளையாட்டு வீரர்களுடன் அரசியல் செய்யவேண்டாம் என அரசிடம் கேட்கின்றோம். தங்களின் இயலாமை மற்றும் நாட்டுப் பிரச்சினைகளை மூடிமறைப்பதற்கு விளையாட்டை அரசியலாக்க முயற்சிக்கும் நடவடிக்கைக்கு எதிராக கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றுபடவேண்டும்.

அத்துடன் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஹோமாக விளையாட்டு மைதானம் அமைப்பது தொடர்பாக மக்களின் எதிர்ப்பு வெளியானது. கொரானோ வைரஸ் தொற்று ஏற்பட்டு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் தற்போதைக்கு இது பொருத்தமில்லை என முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் தெரிவித்திருந்தனர். இது தொடர்பாக பிரதமருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, மஹேல, சங்கக்கார, அரவிந்த போன்ற திறமையான வீரர்கள் இந்த மைதானம் அமைப்பதற்கான தங்களின் எதிர்ப்பைப் பகிரங்கமாக வெளியிட்டிருந்தனர்.

அரசியல் பழிவாங்கல்களின் உச்ச நிலையில் இருக்கும் குழுவொன்றே இன்று நாட்டை நிர்வகிக்கின்றது என்பதை இந்தச் சம்பவத்திலிருந்து புரிந்துகொள்ளலாம். தேர்தல் காலத்தில் இந்த வீரர்களுக்கு எதிராகச் செயற்படுவது அரசுக்கு நன்மையாக அமைந்துவிடும் என மஹிந்தானந்த அளுத்கமகே போன்றவர்கள் நினைத்தார்கள். ஆனால், அது இன்று அரசுக்கே தடையாக மாறி இருக்கின்றது.

மஹேல, சங்கக்கார போன்றவர்கள் எமது நாட்டுக்குப் பெற்றுத்தந்த நற்பெயரை விலை மதிக்க முடியாது. யாராவது ஒரு நபர் உண்மையான நோக்கத்தில் செயற்பட்டால், அந்த நபரை இல்லாமலாக்குவது எமது நாட்டின் கலாசாரமாகி இருக்கின்றது. அதனால் வீரர்கள் மீது கை வைக்க வேண்டாம். அவர்களுடன் அரசியல் செய்ய வேண்டாம் என அரசைக் கேட்கின்றோம். இந்த நிலைமை தொடர்ந்தால் பாரிய பிரச்சினைக்கு நாங்கள் முகம் கொடுக்க நேரிடும். வீரர்கள் விளையாட அச்சப்படுவார்கள். பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை விளையாட விடமாட்டார்கள்.

அத்துடன் எமது ஆட்சிக் காலத்தில் நாங்கள் ஊழல் தொடர்பாக புதிய சட்டம் ஒன்றை அங்கீகரித்திருக்கின்றோம். அதனால் பொய்க் குற்றச்சாட்டுக்களைத் தெரிவிக்காமல் நாட்டின் சட்டத்தைச் செயற்படுத்துமாறு கேட்கின்றோம். ஊழல், மோசடிக்காரர்களை நாங்கள் விளையாட்டுத்துறையில் இருந்து நீக்கினோம்.

குமார் சங்கக்கார உலக கிரிக்கெட் சபை தலைமைத்துவத்துக்குப் போட்டியிடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு மறுபக்கத்தில் போட்டியிடுபவரிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு, எமது முன்னாள் அமைச்சர் ஒருவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தாரோ என்ற சந்தேகம் எமக்கு இருக்கின்றது. தேர்தல் ஒன்று இடம்பெற இருக்கும் நிலையில் இவ்வாறான கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என நாங்கள் அரசைக் கேட்கின்றோம்.

எனவே, அரசியல் பேதங்களை மறந்து கிரிக்கெட் விளையாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கு எதிராக போராட முன்வரவேண்டும். வீரர்களைப் பாதுகாக்க முன்வருமாறு நாமல் ராஜபக்ஷ உட்பட அதன் குழுவினருக்கும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம் – என்றார்.

## சங்கக்காரவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார, சுமார் 9 மணி நேரத்துக்கும் அதிகமாக வாக்குமூலம் வழங்கிய பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஆட்ட நிர்ணயச் சதி தொடர்பில், அப்போதைய தலைவரான குமார் சங்கக்காரவை வாக்குமூலம் வழங்குவதற்கு வருமாறு நேற்று முற்பகல் 9 மணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே முன்வைத்த குறித்த குற்றச்சாட்டு தொடர்பில், அப்போதைய கிரிக்கெட் தேர்வுக் குழுத் தலைவர் அரவிந்த டி சில்வா கடந்த செவ்வாய்க்கிழமை 6 மணி நேர வாக்குமூலமும், இலங்கை கிரிக்கெட் அணி வீரர் உபுல் தரங்க நேற்றுமுன்தினம் இரண்டரை மணி நேர வாக்குமூலமும் வழங்கியிருந்தனர்.

இது தொடர்பில் இன்று வாக்குமூலம் வழங்க இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தனவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## நிபந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பத்தேகம பிரதேசசபை மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு தழுவிய ரீதியில் பொதுஜன பெரமுன வெற்றி பெறுவதுடன் காலி மாவட்டத்திலும் வழமையைக் காட்டியிலும் அதிக ஆசனங்களைக் கைப்பற்றும். இடம் பெறவுள்ள பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறுவது அவசியமாகும்.

அரசமைப்பைத் திருத்தம் செய்யவும், தற்போயை சவால்களை வெற்றி கொள்ளவும் பெரும்பான்மைப் பலத்தை பெறுவது கட்டாயமானதாகும்.

ஜனாதிபதியின் ‘சுபீட்சமான எதிர்காலம்’ கொள்கை திட்டத்தைச் செயற்படுத்தவேண்டுமாயின் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினர் அரசை அமைக்க வேண்டும். கடந்த அரசைப் போன்று ஜனாதிபதி ஒரு பக்கமும், பிரதமர் இன்னொரு பக்கமுமாக இருக்கும் முரண்பாடான அரசு தோற்றம் பெற்றால் அனைத்து இலக்குகளும் பலவீனப்படுத்தப்படும்.

இவ்வாறான நிலை இனியும் தோற்றம் பெறக்கூடாது. நாட்டுக்கும், ஊருக்கும் சேவையற்றுபவர்களை மக்கள் இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்ய வேண்டும்.

கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள் ஆகியோர் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்தவப்படுத்தி இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறார்கள். தமக்கானவரை தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு உண்டு. அந்த உரிமையை முறையாக பயன்படுத்துவது அவசியமானதாகும்.

வடக்கு மக்களின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதியை தெரிவு செய்ய முடியும் என்பதை இல்லாதொழிக்க உங்களின் வாக்குகளினால் முடிந்தது. எனது ஆட்சியில் வடக்கில் துரிதமான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன என்பதை தமிழ் ஊடகவியலாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். எமது ஆட்சியில் மாகாண அடிப்படையில் அபிவிருத்திப் பணிகள் வேறுபடுத்தப்படுத்தப்படாது.

நேற்று தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது, வடக்குக்கு கடந்த அரசு என்ன செய்ததென கேட்டேன். உங்கள் ஆட்சியில் நடந்த அபிவிருத்திக்குப் பின்னர் ஒன்றும் நடக்கவில்லையெனத் தெரிவித்தனர்.

மந்த கதியில் உள்ள அபிவிருத்தி நிர்மாணப் பணிகள் புதிய அரசில் துரிதமான நிறைவு செய்யப்படும் – என்றார்.

# 2ஆவது கொரோனா அலையைத் தடுப்பதற்கு ஐ.தே.கவுக்கு வாக்களிக்க வேண்டும் மக்கள்!

## ரணில் இப்படிக் கோரிக்கை



கொரோனா வைரஸின் முதலாவது அலையைக் கட்டுப்படுத்த தற்போதைய அரசுக்குத் தனது கட்சியும் ஆதரவு வழங்கியது என ஐக் கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஆனால், இரண்டாவது கொரோனா அலைக்கு முகம் கொடுப்பதற்கு அரசிடம் எந் தத் திட்டமும் இல்லை எனவும் அவர் குறிப் பிட்டார்.

இதனால், பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

கொரோனாவின் இரண்டாவது அலையிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் திட்டம் தனது கட்சிக்குள் இருக்கின்றது எனவும் அவர் கூறினார்.

உலக சுகாதார நிறுவனம் இரண்டாவது கொரோனா அலை குறித்து எச்சரித்துள்ளது எனவும், இரண்டாவது அலை பல நாடுகளில் பரவி வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

# போதைப்பொருள் கடத்தல்:

# 5 வருடங்களில் 61 பேருக்கு மரண தண்டனை விதிப்பு!

## 160 பேருக்கு ஆயுள் தண்டனை

போதைப்பொருள் கடத்திய 61 பேருக்கு கடந்த ஐந்து வருடங்களில் மரண தண்டனை விதிக்கப்பட் டுள்ளது. அதேவேளை, 160 பேருக்கு ஆயுள் தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கூறினார்.

அத்துடன் 582 மரண தண்டனை விதிக்கக் கூடிய வழக்குகள் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் 4 ஆயிரத்து 338 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. இவற்றை வைத்திருந்த மற்றும் கடத்திய ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 257 பேர் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் 27 ஆயிரத்து 500 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளமையுடன் 2 இலட்சத்து 52 ஆயிரத்து 259 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

1,828 கிலோ கொக்கைன் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 1,828 பேர் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அதிகூடிய தண்டனையாக மரண தண்டனையை விதிக்க முடியும். 582 மரண தண்டனை வழக்குகள் மேல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகின்றமையுடன், 61 பேருக்கு இந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் மரணதண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வலையமைப்பை போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு முற்றாக ஒழித்துள்ளது. தொடர்ந்தும் போதைப்பொருள் ஒழிப்புக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார்.

# தன் ஊழியர்களின் பணி நீக்கம்; ஆளுநருக்கு ஆனல்ட் முறையீடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை03

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வராகிய தான் தேர்தலில் போட்டியிடுவதன் காரணமாக விடுமுறையில் நிற்கும் சமயம் எனது தனிப்பட்ட ஊழியர்களாக நியமிக்கப்பட்ட பணியாளர்களை நீக்குமாறு கோரி சபையில் பிரேரணை நிறைவேற்றியமை சட்டப்படி செல்லுமா என வடக்கு மாகாண ஆளுநருக்கு முதல்வர் இ. ஆனலட் கடிதம் எழுதி வினாவியுள்ளார்.

மாநகர முதல்வரின் பணிக்காக ஆறு பணியாளர்கள் அனுமதிக்கப்படுவது வழமையாகும். அந்த பணியாளர்களை சபையின் ஊழியர்களில் இருந்து பெறுமாறு ஏனைய கட்சிகள் தெரிவித்த நிலையில் தனக்குத் தேவையான ஊழியர்களை தற்காலிக அடிப்படையில் இணைக்க சபையின் ஒப்புதலைப் பெற்றார் முதல்வர் ஆனலட். இதன் அடிப்படையில் ஆறு பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே தாம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளராக இருப்பதனால் மூன்று பணியாளர்களை தற்காலிகமாகப் பணிநிறுத்திவிட்டுஎஞ்சியமூவரை மட்டும்தொடர்ந்து பணியாற்ற அவர் அனுமதித்திருந்தார். இச்சமயத்தில் இவர்களையும் இடை நிறுத்துமாறு சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபையின் அனுமதியுடன் நியமிக்கப்பட்ட ஊழியர்களை தான் விடுமுறையில் நின்ற சமயம் தீர்மானம் நிறைவேற்றி வெளியேற்றியமை சட்ட ரீதியிலானதுதானா என அறியத்தருமாறு கோரி எழுத்தில் கடிதம் சமர்ப்பித்துள்ளார் ஆனலட்.

இந்தக் கடிதங்களின் பிரதி உள்ளூராட்சி ஆணையாளர், மாநகர ஆணையாளர் உள்ளிட்டோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# முகக்கவசங்களில் படம் பொறித்து பிரசாரம் செய்யத் தடை விதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை03

பிரசார நடவடிக்கைகளுக்காக முகக்கவசங்களில் வேட்பாளர்களின் இலக்கங்கள்,பெயர்கள் மற்றும் படங்கள் போன்றவற்றை வெளியிட முடியாது என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இன்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்தே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான அறிவித்தல் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கிலும் தெற்கிலும் உள்ள சில கட்சிகளின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட முகக்கவசங்கள் இனம் காணப்பட்டதையடுத்தே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

# யாழ். மாநகரசபை தொழிலாளர்கள் பணி நீக்கத்துக்கு எதிராக முறையீடு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் , ஜூலை 03

யாழ்ப்பாணம் மாநகர சபையில் தற்காலிக ஊழியர்களாகப் பணியான்றிய தங்களைத் தேர்தல் காலத்தில் இடைநிறுத்தியமை தேர்தல் விதிமுறை மீறலாகக் கருதித் தம்மைத் தொடர்ந்தும் பணியாற்ற உத்தரவிடுமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. மூன்று தொழிலாளர்கள் இவ்வாறு முறையிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் 2019-03-01 முதல் தேவைக்கேற்ப தொழிலாளர்களாகப் பணியாற்றி வந்த எம்மை 2020-06-24ஆம் திகதிய சபை அமர்வில் இடைநிறுத்துவதற்கு கட்சிகள் சார்பில் பிரிந்து வாக்களித்து எடுத்த முடிவிற்கு அமைவாக 2020-06-26 முதல் ஆணையாளரின் எழுத்து மூலமான அறிவித்தலின் பேரில் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டோம்.

எனவே அரச செயலகங்களில் தேர்தல் காலத்தில் பதவி உயர்வு , இடமாற்றம் , புதிய நியமனம் , பணி நீக்கம் என்பன செய்ய முடியாது என்பதன் அடிப்படையில் மாநகர ஆணையாளரின் உத்தரவு செல்லுபடியற்றது என உத்தரவிடுமாறு கோருகிறோம். - என அவர்கள் சார்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

# மங்கள,சாகலவிடம் முறையிட்டும் தாக்குதலைத் தடுக்க முடியவில்லை

## ஈஸ்டர் ஞாயிறு சம்பவம் குறித்து சாட்சியம்

கொழும்பு, ஜூலை 03

ஈஸ்டர் தாக்குதல் மற்றும் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புப்பட்ட நபர் ஒருவர் தொடர்பாக அப்போதைய வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் சட்டம் சமாதானம் தொடர்பான அமைச்சர் சாகல ரத்நாயக்க ஆகியோரை சந்தித்து பிரத்தியேகமாக அவர்களை அறிவுறுத்தினார் என முன்னாள் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மொஹமட் மொஹி தீன் அப்துல் கபூர் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிக்கும் போதே மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி இதனை தெரிவித்தார்.

தான் இதுபற்றி விளக்கமளிப்பதற்காக நாடாளுமன்ற தெரிவு குழுவில் கோரிக்கை விடுத்த போதிலும் அதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தனக்கு உயர்தரக் கல்வியை போதித்த ஆசிரியை ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது 23 வயது மகனான ஆசிக் என்பவர் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பு வைத்திருக்கிறார் என அறிவித்தார் எனவும் முன்னாள் நீதிபதி கபூர் மேலும் தெரிவித் துள்ளார்.

அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் தான் அறிந்த தகவல்களை கூறியதன் பின்னர் அவற்றை பதிவு செய்து கொண்டு நடவடிக்கை எடுப்பார் என அவர் கூறினார் எனவும் மேலும் தெரிவித்தார்.

எனினும் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெறும் வரை தன்னிடம் எதனையும் வினவவில்லையென முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தெரிவித்தார். தான் தகவல் வழங்கிய சந்தர்ப்பத்தில் செயற்பட்டிருந்தால் இந்தல் பயங்கரவாத வலையமைப்பை முற்றாக ஒழித்திருக்க வாய்ப்பிருந்த தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வரப்போவது விநாச காலமா?

வரும் தேர்தலில் ஆளும் பொதுஜன பெரமுனவுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் கிட்டுமானால் கடந்த நல்லாட்சி அரசினால் கொண்டு வரப்பட்ட நாட்டுக்குப் பாதகமான அனைத்துச் சட்டங்களும் மாற்றியமைக்கப்படும் என ஆளும் கட்சியின் முக்கிய பிரமுகரும், கம்பஹா மாவட்ட முதன்மை வேட்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருக்கின்றார்.

பொதுவான சட்டங்களைக் கொண்டு வரவும் நிறைவேற்றவும் நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை போதுமானது.

அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு மாறான சட்டங்களையும் அரசமைப்புத் திருத்தங்களையும் மேற்கொள்வதற்குத்தான் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அவசியமாகப்படுகின்றது.

இப்போது வெளிப்பேச்சுக்கு 19 ஆவது திருத்தத்தை திருத்துவது, நீக்குவது குறித்துப் பேசப்பட்டாலும் அதையும் தாண்டி 13 ஆவது திருத்தத்தில் கைவைப்பதும் பொதுஜன பெரமுனவின் திட்டம் என்பது இப்போது மெல்லக் கசியத் தொடங்கியுள்ள தகவல்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அது முப்பதிரண்டு வருடங்களாக நாட்டின் அரசமைப்பில் - மீயுயர் சட்டத்தில் -எழுத்தில் உள்ளது. ஆனால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இன்று வரை செயற்படுத்தப்படவில்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட அதிகாரங்களில் வலிமையான, முக்கிய விடயங்கள் - பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கியமை உட்பட - நடைமுறைப்படுத்தப்படவேயில்லை. அவை 32 ஆண்டுகளாக வெறுமனே சட்டப் புத்தகத்தில் - எழுத்தில் - இருந்தன தானே தவிர நடைமுறைப்படுத்தப்படவில்லை. நடைமுறைப்படுத்தப்பட்டவற்றில் கூட பல அதிகாரங்கள் காலத்துக்குக் காலம் கொண்டுவரப்பட்ட புதிய, புதிய சட்டங்கள் மூலம் நீர்த்துப் போகச் செய்யப்பட்டன.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்ட அல்லது இணங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவே 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. அது கொண்டு வரப்பட்ட சமயம் அதில் முனைப்புக் காட்டிய இந்தியா, பின்னர் அந்த 13 ஆவது திருத்தம் நீர்த்துப் போகச் செய்யப்பட்ட சமயங்களிலும், அதில் உள்ள முக்கிய ஷரத்துக்கள் தசாப்த காலமாக நடைமுறைப்படுத்தப்படாமல் உதாசீனம் செய்து புறமொதுக்கப்பட்ட போதும் அவ்விடயத்தில் சிரத்தை காட்டாமல் வளாவிருந்ததன் மூலம் தமிழ் மக்களைக் கைவிட்டது.

இந்தியாவின் சிரத்தையின்மையை வசமாகப் பயன்படுத்திய இலங்கை, நீதிமன்ற உத்தரவு என்ற சட்ட நாடகத்தின் மூலம் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் நரித் தந்திரத்தை கனகச்சிதமாக ஒப்பேற்றியது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அடுத்தும், அதன் பெறுபேறாகக் கிட்டிய 13 ஆவது திருத்தத்தின் கீழும் சுமார் 17 ஆண்டுகள் இணைந்திருந்த வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டபோதும், இலங்கை மீது அந்த ஒப்பந்தம் தொடர்பில் சர்வதேசக் கடப்பாட்டு அழுத்தத்தைக் கொண்டிருந்த இந்தியா அது விடயத்தில் எதுவும் செய்யவில்லை.

இந்தியாவின் இந்தப் பொறுப்பற்ற செயல்போக்கை மேலும் வசமாகப் பயன்படுத்தத் தற்போதைய பொதுஜன பெரமுன அரசு தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

வரும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் கிடைத்தால் அதைச் செய்துவிடுவதற்கு தற்போதைய அரசியல் தலைமை உறுதி பூண்டிருக்கின்றமையையே நேற்று முன்தினம் கொழும்பில் தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர் ஒருவரிடம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட தகவல் உறுதிப்படுத்தி நிற்கின்றது.

13ஆவது திருத்தத்தில் மாகாணங்களுக்கு - மாகாண முதல்வர்களுக்கு - பொலிஸ் அதிகாரங்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்குவது, மாகாண பொலிஸ் பற்றி எல்லாம் ஏற்பாடுகள் உள்ளன.

முப்பத்திரண்டு வருடமாக நாட்டின் மீயுயர் சட்டத்தில் சட்டமாக இருக்கும் விடயத்தை மாறி மாறி வந்த எந்த அரசும் நடைமுறைப்படுத்த முயற்சிக்கவே இல்லை. ஆனால் யாருக்காக அந்த மாகாண ரீதியான அதிகாரப்பகிர்வு செய்யப்பட்டதோ அவர்களின் - அதாவது சிறுபான்மையினரின் - ஆதரவின்றி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்ற சாத்தியம் தென்பட்ட உடனேயே அந்த ஏற்பாடுகளை அரசமைப்பிலிருந்து அடியோடு அகற்றுவதற்குத் தென்னிலங்கை அதிதீவிரம் காட்டி நிற்கின்றது.

இதனைத்தான் *"மாகாண முதல்வர்களுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதா? வழங்க முடியாது. அந்த ஏற்பாட்டை நீக்க வேண்டும்."* என்ற சாரப்பட கருத்து வெளியிட்டு தமது அரசின் மனக்கிடக்கையை அம்பலப்படுத்தியிருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இதுதான் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் உண்மை முகம்; உள்ளார்ந்த கோர வடிவம்.

சிறுபான்மையினரின் ஆதரவின்றி தனித்து தெற்கு சிங்களம் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறும் என்றால், அது சிறுபான்மை இனங்களுக்கு விநாச காலம்தான்!

# தபால் ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றிப் பிரதமருக்கு விளக்கம்







அரச நிர்வாக இல 6/2006 சுற்றறிக்கை செயற்படுத்தப்பட்டதன் பின்னர் அந்த சுற்றறிக்கைக்கமையவும், அதற்கு வெளியேயும் தபால் திணைக்களத்தினுள் மேற்கொள்ளப்படும் முறையற்ற தீர்மானங்கள் காரணமாக முழுமையான தபால் ஊழியர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாக இலங்கை தபால் தொழிற் சங்கங்களின் முன்னணி தெரிவித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இலங்கை தபால் தொழிற் சங்கங்களின் முன்னணி இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்குவதற்காக புதிய சேவை யாப்பு ஒன்று தயாரிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இருந்த போதிலும் 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததனை தொடர்ந்து அதனை செயற்படுத்தவில்லை என இலங்கை தபால் தொழிற்சங்கங்களின் முன்னணி, பிரதமருக்கு சுட்டிக்காட்டியது.

பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தின் இறுதி காலப்பகுதியில் இந்த சிக்கல்களுக்கு ரனுக் ஆணைக்குழு அறிக்கை ஊடாக சமர்பிக்கப்பட்ட யோசனையின் மூலம் தொடர்ந்து தபால்ஊழியர்களில் பெரும்பான்மையினருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக முன்னணியின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை தபால் தொழிற்சங்கங்களின் முன்னணி சுட்டிக்காட்டிய சிக்கல்கள் தொடர்பில் அமைச்சரவையுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு தீர்வு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வார் எனப் பிரதமர் இதன் போது தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் பிரதமர் செயலாளர் காமினி செனரத் மற்றும் இலங்கை தபால் தொழிற்சங்கங்களின் முன்னணியின் பிரதிநிதிகள் சிலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# சுமந்திரன், சிறிதரனின் உருவப்பொம்மைகளை ஆளரவமற்ற வீதியில் எரித்த ஐவரின் 'சாதனை'!

### சமூக ஊடகங்களில் செய்தி







யாழ்ப்பாணம், ஜூலை 03

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சிறிதரன் போன்றவர்களின் கொடும்பாவிகள் நேற்று யாழ் வடமராட்சியில் எரியூட்டப்பட்டுள்ளன.

முகமூடி அணிந்து தங்களை அடையாளப் படுத்தாமல் மறைத்த ஐந்து இளைஞர்கள் இந்தச் 'சாதனை'யைப் புரிந்தனர் என்ற விவரம் சமூக ஊடகங்களில் நேற்று மாலை வெளியான செய்திகள் மூலம் அம்பலமானது.

இரண்டு தலைவர்களுக்கும் எதிராக குற்றசாசனங்களை வாசித்து, அந்த இருவரது உருவப் பொம்மைகளும் எரியூட்டப்பட்டன என்றும் -

சுமந்திரனின் சொந்தப் பிரதேசமான வடமராட்சி முள்ளியில் வல்லிபுரக் கோவிலுக்கு அருகே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்றும் -

அண்மைக்காலமாக சுமந்தின் மற்றும் சிறிதரன் போன்றோர் பொது வெளிகளில் தெரிவித்து வருகின்ற பல்வேறு கருத்துக்கள் யாழ் தமிழ் இளைஞர்கள் மத்தியில் பலத்த எதிர்வலைகளை உருவாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது என்றும்-

அந்த ஐந்து பேரின் அருஞ்சாதனை பற்றிய செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

தயாராகக் கட்டி எடுத்து வரப்பட்ட உருவப் பொம்மைகளின் தலைப்பகுதியில் சுமந்திரன், சிறிதரன் ஆகியோரின் படங்களை ஒட்டி ஆளரவமற்ற வீதியில் அவசர அவசரமாக அதனை எரிக்கும் வீடியோப் படமும் அந்த சமூக ஊடகங்ளில் வெளியாகின.

# கல்வியில் கிளிநொச்சி தொடர்ந்தும் பின்னிலை

## மாவட்ட அரச அதிபர் கவலை

**கிளிநொச்சி, ஜூலை 03**

**கிளிநொச்சி மாவட்டம் தற்போது கல்வியில் கணிசமானஅளவு வளர்ச்சி கண்டு வருகின்ற போதும் இலங்கையின் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகவே காணப்படுகின்றது. இதனை முன்னேறுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என மாவட்ட அரச அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**



மாவட்டத்தின் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

கொரோனா காலத்தில் கூடுதலான சிறுவர்கள் வியாபாரம் உள்ளிட்ட தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்போது சமுக இடைவெளி பேணப்படுவதுடன் முகக் கவசங்களை அணிந்தும் கைகளைக் கழுவி உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

சமுகத்தில் சிறுவர்களின் பாதுகாப்பு மிக முக்கியமானது என்பதை எல்லோரும் உணர்ந்து தங்களது சேவைகளை வழங்கவேண்டும்.

சிறுவர் அபிவிருத்திக் குழுவின் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். அது தொடர்பான கிராம மற்றும் பிரதேச மட்ட கலந்துரையாடல்களையும் முன்னெடுக்கமுடியும் .

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி கணிசமானளவு முன்னேற்றத்தைக் கண்டாலும் இலங்கையில் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகவே காணப்படுகின்றது. இதனை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு ஆசிரியர்கள், பெற்றோர்கள் தமது பணிகளை தொடர வேண்டும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர்கள், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகதர்தர், வைத்திய அதிகாரிகள், பொலிஸ்அதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# நல்லை ஆதீன குரு முதல்வரை சந்தித்து ஆசி பெற்றார் சஜித்





நல்லை ஆதீன குரு முதல்வரை ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதமர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ நேரில் சந்தித்து ஆசி பெற்றார்.

யாழ்ப்பாணத்துக்குத் தேர்தல் பிரசாரத்துக்காக வருகை தந்துள்ள சஜித் பிரேமதாஸ நேற்றுக் காலை நல்லூர் ஆலய வீதியிலுள்ள நல்லை ஆதீனத்துக்குச் சென்றார்.

அங்கு நல்லை ஆதீன குரு முதல்வரிடம் அவர் ஆசியைப் பெற்றதுடன் சமகால நிலவரங்கள் தொடர்பிலும் பேசினார்.

இந்தச் சந்திப்பில் சஜித்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் வேலாயுதம் கணேஸ்வரன், வேட்பாளர் திருமதி உமாச்சந்திரா பிரகாஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அங்கஜனுக்கு எதிராக இரு முறைப்பாடுகள்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் அங்கஜன் இராமநாதனுக்கு எதிராக யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவில் நேற்று இரண்டு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் உபசெயலர் க. குணாளன் இந்த முறைப்பாடுகளை நேற்று மேற்கொண்டுள்ளார்.

அரசின் அபிவிருத்தித் திட்டமான சப்ரிகமவை தனது உத்தியோகபூர்வ முகநூலில் பகிர்ந்து அதனை முன்னிறுத்து வாக்குக் கேட்கும் நடவடிக்கையில் ஈடுபட்



டுள்ளார் என்றும், இது தேர்தல் விதிமுறையை மீறிய செயல் என்றும் தனது முறைப்பாட்டில் குணாளன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நல்லூர் கோவில் வீதியில் அங்கஜன் இராமநாதன் தனது அலுவலகத்தில் தனது படத்தையும், முன்னாள் ஜனாதிபதியும் வேட்பாளருமான மைத்திரிபால சிறிசேனவின் படத்தையும் காட்சிப்படுத்தியுள்ளார் என்றும், இது தேர்தல் விதிமுறைகளை மீறிய செயல் என்றும் மற்றொரு முறைப்பாட்டை அவர் பதிவு செய்துள்ளார்.

# கொழும்பு துறைமுக ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு போராட்டம்




கொழும்பு துறைமுகத்தின் ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தைப் பாதுகாப்பதற்கான தொழிற்சங்க கூட்டணியின் தொழிற்சங்க நடவடிக்கைகளை அடுத்து, கொழும்பு துறைமுகத்தின் ஊழியர்கள் இவ்வாறு பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று அத்தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைப் பாதுகாப்பதற்கான தொழிற்சங்க கூட்டணியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள், நேற்று முன்தினத்திலிருந்து கென்றி கிரேன்கள் மீது ஏறி தொடர்ந்தும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தில் நிறுவுவதற்காகக் கொண்டுவரப்பட்ட கென்றி பாரம் தூக்கியை குறித்த இடத்தில் நிறுவுமாறு வலியுறுத்தியே அவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# இறைவரித் திணைக்களம் திங்கள் முதல் வழமைக்கு!



உள்நாட்டு இறைவரித் திணைக்களமானதுஎதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழமை போன்று செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பொதுமக்களுக்கான தங்களது சேவைகளை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நந்துன் குருகே தெரிவித்துள்ளார்.

# மாலைதீவில் சிக்கியிருந்த 178 பேர் நாடு திரும்பினர்!

கொரோனா அவைஅரஸ் தொற்று நோய் காரணமாக, இலங்கைக்கு வர முடியாமல், மாலைதீவில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 178 பேர் நாட்டை வந்தடைந்தனர்.

ரீலங்கன் எயார்லைன்ஸிற்கு சொந்தமான விசேட விமானத்தில் இவர்கள் முற்பகல் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் மாலைதீவிலுள்ள சுற்றுலா ஹோட்டல்களில் பணியாற்றினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்தில் வைத்து இவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதன் முடிவுகள் கிடைக்கும் வரை, விமான நிலையத்துக்கு அருகிலுள்ள ஹோட்டல்களில் இவர்கள் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# கஞ்சிப்பானையின் சிறைக் கூடத்தில் கையடக்கத் தொலைபேசி சிக்கியது!

கஞ்சிப்பானை இம்ரான் சிறைவைக்கப்பட்டுள்ளபூஸா சிறையில்மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் அவரது சிறைக்கூடத்திலிருந்து கையடக்கத்தொலைபேசியொன்று மீட்கப்பட்டுள்ளது.

பூஸாசிறையின்பாதுகாப்புக்கடைமையில்ஈடுபட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில், இந்தக் கையடக்கத் தொலைபேசி மீட்கப்பட்டது எனப்பொலிஸ்ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள்கடத்தல் தொடர்பில்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கஞ்சிப்பானைஇம்ரான், சிறைவைக்கப்பட்டுள்ள இலக்கம் 03 சிறைக் கூடத்திலிருந்து ஒரு அன்ட் ரொய்ட் வகை கையடக்கத் தொலைபேசி, சார்ஜர் 01, சிம்அட்டைகள்04ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறுகைப்பற்றப்பட்டுள்ள பொருள்களை மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுப்பிரிவிடம்ஒப்படைக்கநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

# சீனா இராணுவத்தில் புரட்சி வெடிக்கும் இந்திய ஊடகங்கள் பரபரப்புச் செய்தி



இந்தியாவுடனான எல்லை மோதல் காரணமாகச் சீனாவின் இராணுவத்தில் புரட்சி வெடிப்பதற்கு வாய்ப்புள்ளது என்று சீனாவின் மூத்த தலைவர் ஒருவர் எச்சரித்துள்ளார். சீனாவில் இராணுவப் புரட்சி வெடிக்க வாய்ப்புள்ளது என்று சீனாவின் கொம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவரின் மகன் ஜியான்லி யாங் எச்சரித்துள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சீனா அரசுக்கு எதிரான எதிர்ப்புகள் அதிகரித்து வருவதால் முன்னாள் இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர் அரசுக்கு எதிராகக் களமிறங்குவதற்கு வாய்ப்புள்ளது.

அவர்கள் ஒன்று சேர்ந்து அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் புரட்சி செய்ய வாய்ப்புள்ளது என்பதால் ஜிங் பிங் அச்சத்தில் இருக்கிறார். சீனாவின் அரசில் இராணுவத்தின் பங்குதான் அதிகம். இராணுவத்திற்கு ஏதாவது ஒன்று நேர்ந்தால் அங்கு என்ன வேண்டுமானாலும் நடக்கும். இராணுவத்துக்கு எதிராக ஜிங்பிங் செயற்படத் தொடங்கி உள்ளார். இது கண்டிப்பாக அவருக்கு நல்லது அல்ல. சீன இராணுவத்தில் இருக்கும் பலர் ஏற்கனவே ஜிங்பிங்கிற்கு எதிராக இருக்கிறார்கள். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார் என்று அந்த ஊடகச் செய்திகள் நீள்கின்றன.

சீன அதிபர் ஜின் பிங்கிற்கு எதிராகக் குரல் கொடுக்கிறார் என்று இந்திய ஊடகங்களால் குறிப்பிடப்படும் சீனாவின் கொம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவரின் மகன் ஜியான்லி யாங் என்பவர் சீன அரசைத் தொடர்ந்து விமர்சித்து அமெரிக்காவில் வசித்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## ரஷ்யப் போர் விமானங்களை வாங்க முனைகிறது இந்தியா

ரஷ்யாவிடம் இருந்து 33 போர் விமானங்களை வாங்குவதற்கு இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது. இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடந்த பாதுகாப்புத் தளவாடங்கள் கொள்முதல் குழுக் கூட்டத்திலேயே இந்த அனுமதி அளிக்கப்பட்டது.

18ஆயிரத்து 148 கோடி இந்திய மதிப்பிலான 33 போர் விமானங்களை ரஷ்யாவிடமிருந்து வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் 12 சுகோய் 30 எம்.கே.ஜே. ரக விமானங்கள் மற்றும் 21 மிக் – 29 எஸ் ரக போர் விமானங்கள் அடங்குகின்றன. அத்தோடு விமானப்படை மற்றும் கடற்படைக்கு 248 அஸ்திரா ஏவுகணைகளை வாங்கவும் பாதுகாப்புத்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திய – சீன எல்லைப் பதற்றத்தைத் தொடர்ந்து ஆயுதக் கொள்வனவில் இந்தியா அக்கறை செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீரில் மிதமான நடுக்கம்

இந்தியாவின் லடாக்கில் உள்ள கார்கில் மற்றும் ஜம்மு காஷ்மீரில் இன்று மதியம் நிலநடுக்கங்கள் உணரப்பட்டுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். இந்தியாவின் வட பகுதிகளில் கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாக நிலநடுக்கங்கள்உணரப்பட்டுவருகின்றன.

இந்த நிலையில், லடாக்கின் கார்கில் பகுதியில் இருந்து வடமேற்கே 119 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டரில் 4.5 ஆகப் பதிவானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், ஜம்மு காஷ்மீரில் உள்ள கத்ரா பகுதியிலும் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவுகோலில் 3.6 ஆகப் பதிவானது. அரியானா, மகாராஷ்டிரா, மிசோரம், ஒடிசா, மேகாலயா, சத்தீஸ்கர் எனக் கடந்த வாரம் முதல் தொடர்ந்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டுவருவதுபொதுமக்களிடையே அதிர்ச்சியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## பிரபல விளையாட்டு மைதானத்தில் கொரோனா சிகிச்சை நிலையம்



இந்தியாவின் தலைநகர் டெல்லியிலுள்ள கொமன்வெல்த் விளையாட்டு மைதானத்தில் 600 படுக்கைகளுடன் கூடியதாகக் கொரோனா சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்துக்கு நேரில் சென்று டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால், துணை முதலமைச்சர் மனிஷ் சிசோடியா ஆகியோர் ஆய்வு செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த கெஜ்ரிவால், இந்தச் சிகிச்சைமையம்600படுக்கைகளைக் கொண்டதாகும். 200 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளன. ஏனைய 400 படுக்கைகளும் விரைவில் தயார் செய்யப்படும். ஓரிரு நாள்களில் இந்தச் சிகிச்சை மையம் செயற்படத் தொடங்கும் என்றார்.

டெல்லியில் கொரோனா பரவல் வேகம் அதிகரித்த நிலையில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது. டெல்லியில் இதுவரை 89 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவின் மராட்டியம் மற்றும் தமிழக மாநிலங்களுக்கு அடுத்தபடியாக அதிக கொரோனா பாதிப்புடன் டெல்லி மூன்றாம் இடம் வகிக்கிறது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனையில் படுக்கைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் டெல்லியில் உருவாகியுள்ளது. இந்த நிலையிலேயே குறித்த விளையாட்டு மைதானம் சிகிச்சையளிக்கின்ற தளமாகத் தயார்ப்படுத்தப்படுகிறது.

## இந்தியாவுக்கு சீனா பதிலடி!

இந்திய ஊடகங்கள் மற்றும் வலைத்தளங்களைச் சீனா அதிரடியாகத் தடை செய்தது. இந்தியப் பத்திரிகைகள், செய்தி இணையத்தளங்கள் அனைத்தையும் சீனா தனது நாட்டில் தடை செய்தது.

இந்தியா – சீனா இடையே அண்மையில் ஏற்பட்ட எல்லை மோதலைத் தொடர்ந்து சீனச் செயலிகளுக்கு இந்திய அரசு தடை விதித்தது. இந்த நிலையிலேயே இந்தியப் பத்திரிகைகள், இணையங்கள் என அனைத்துக்குமான தடையைச் சீனா அறிவித்தது.

சீனாவின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து இந்தியப் பத்திரிகைகள் சங்கம் அவசர அவசரமாக ஓர் அறிக்கையை வெளியிட்டது.

அந்த அறிக்கையில்இ இந்தியப் பத்திரிகைகள் மற்றும் ஊடக வலைத்தளங்களின் அணுகலைச் சீனா அரசால் கட்டுப்படுத்த முடியாது என்றும் இந்தியாவில் சீன ஊடகங்களுக்கான அனைத்து வகையான அணுகல்களையும் தடைசெய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்திய ஊடக நிறுவனங்களில் சீனர்கள் மேற்கொண்ட முதலீடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் சீற்றம் வெளிப்படுத்தினர்.

### பின்னணி

எல்லை மோதலைத் தொடர்ந்து தமது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சீன நிறுவனங்களைச் சேர்ந்த டிக்டாக், ஷேர் இட், வீ சேட் உள்ளிட்ட 59 செயலிகளுக்குத் தடைவிதிப்பதாக இந்தியா அறிவித்தது. அலைபேசிகளில் பதிவிறக்கம் செய்யப்பட்டிருந்த டிக் டாக் உள்ளிட்ட செயலிகளும் முடக்கப்பட்டன.

சீனச் செயலிகளை இந்திய அரசு தடை செய்திருப்பது தொடர்பாக இந்தியாவுக்கான சீனத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் மத்திய அரசின் நடவடிக்கை இந்தியாவின் சந்தைப் போட்டிக்கும், நுகர்வோர் நலனுக்கும் உகந்ததல்ல எனத் தெரிவித்தது. சீனா மீதான இந்தியாவின் நடவடிக்கைக்கு அமெரிக்க வெளியுறவுச் செயலர் மைக் பாம்பியோ ஆதரவும் தெரிவித்தார். இந்த நிலையிலேயே இந்தியா மீது சீனா தடைகளை வித்துள்ளது.

## அனல் மின் நிலைய விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல்

இந்தியாவின் கடலூர் மாவட்டம் நெய்வேலியில் உள்ள என்.எல்.சி. அனல் மின்நிலையத்தில் நடந்த வெடி விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் நெய்வேலியில் இன்று கடையடைப்பு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த அனைவரும் கடைகளை அடைத்து, உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்க உள்ளனர். மருந்தகங்கள் தவிர அனைத்துக் கடைகளும் இன்று அடைக்கப்படும் என வர்த்தக சங்கத்தினர் தெரிவித்தனர்.

**நடந்தது...**

கடலூர் மாவட்டம் நெய்வேலியில் உள்ள என்.எல்.சி. அனல் மின் நிலையத்தில் திடீரென உலைக்கோபுரம் ஒன்று வெடித்தது. இதில் 6 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 16 பேர் படு காயங்க ளுக்குள்ளாகினர். அவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**இந்தியாவின் கடலூர் மாவட்டம் நெய்வேலியில் உள்ள என்.எல்.சி. அனல் மின்நிலையத்தில் பெரும் வெடி விபத்து ஏற்பட்டது. அதைச் சித்திரிக்கின்ற ஒளிப்படங்களில் சில.**







# இடிந்து வீழ்ந்த சுரங்கத்துக்குள் புதைந்து இறந்தவர்கள் தொகை

## 100 ஐத் தாண்டியது











மியன்மாரின் வடக்குப் பகுதியில் உள்ள காச்சின் மாகாணத்தில் ஹபகண்ட் பகுதியில் உள்ள ஜேட் என்கிற சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை 150ஐத் தாண்டியது. மாணிக்கக் கல் (பச்சை நிற மரகதக் கல்) அகழ்ந்தெடுக்கப்பட்டு வந்த குறித்த சுரங்கம் அங்கு பெய்த கடும் மழை காரணமாக இடிந்து வீழ்ந்தது.

இதனால் அங்கு அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தொழிலாளர்கள் மண்ணுக்குள் புதைந்தனர்.

இதுவரை இந்த நிலச்சரிவில் சிக்கி 163 பேர் உயிரிழந்துள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இன்னும் பலர் மண்ணில் புதைந்திருக்கலாம் என அஞ்சப்படுவதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. மியன்மாரில் நடந்த மோசமான சுரங்க விபத்து இது என்று மீட்புப் பணியாளர்கள் கவலை தெரிவித்தனர்.

குறித்த சுரங்கம் இடிந்து வீழ்த்ததில் 50 தொழிலாளர்கள் உயிரிழந்தனர் என்றும் உயிரிழந்தவர்கள் தவிர மீட்கப்படாத நிலையில் 100க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் என்றும் முதற்கட்டத் தகவலாகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது உயிரிழப்பு எண்ணிக்கை 100ஐத் தாண்டியுள்ளது.

# பருத்திக் கவசம் நல்லதாம்!



கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்குப் பருத்தித் துணியைக்கொண்டு தயாரிக்கின்ற முக கவசம் நல்லது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனராம்! 2 அடுக்கு மெல்லிய பருத்தித் துணிகளை கொண்டு தயாரிக்கப்பட்டு, நன்கு பொருந்துகிற முகக்கவசங்கள் கொரோனா வைரஸ் தடுப்பில் மிகுந்த பயனுள்ளவையாக இருக்கின்றன என்று அமெரிக்காவில் புளோரிடா அட்லாண்டிக் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டறிந்து இருக்கிறார்கள்.

இந்த வகை முகக் கவசங்கள்தான், இருமல் மற்றும் தும்மல் மூலம் வெளிப்படுகிற நீர்த்திவலைகளின் பரவலைத் தடுத்து நிறுத்துகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு முடிவுகள், பிசிக்ஸ் ஒவ் புளுய்ட்ஸ் (திரவ இயற்பியல்) என்ற பத்திரிகையில் வெளியாகி உள்ளனவாம்!

# சீனாவின் ஹொங்கொங் சட்டத்துக்கு தடைவிதிக்க அமெரிக்காவில் தீர்மானம்




சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங் ஆட்சி மன்றத்தில் சீனாவின் மத்திய அரசு பாதுகாப்புச் சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியது. இதைக் கண்டித்து அதன் மீது தடைகள் விதிப்பதற்கு அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை தீர்மானித்துள்ளது. பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியுள்ள இந்தத் தடைத் தீர்மானம் செனட் ஒப்புதலைப் பெற்ற பிறகு அமெரிக்க அதிபர் ட்ரம்பின் கையெழுத்துக்கு அனுப்பப்படும். இந்தத் தடைகளின் கீழ், சீனாவுடன் வணிகம் செய்யும் வங்கிகளுக்கு அபராதம் விதிக்கப்படும்.

**சீனா - ஹொங்கொங் விவகாரம்**

பிரிட்டனின் ஆளுகையில் இருந்த ஹொங்கொங் 1997ஆம் ஆண்டு சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கெனப் பிரிட்டன், சீனா இரரண்டு நாடுகளுக்கு இடையில் கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி 1997 முதல் 50 ஆண்டுகளுக்கு 'ஒரு நாடு, இரு அமைப்பு' என்ற ஏற்பாடு நீடிக்கும். இந்த ஏற்பாட்டின்படி ஹொங்கொங் 50 ஆண்டுகளுக்குத் தன்னாட்சிச் சுதந்திரங்களை அனுபவிக்கும். சீனா தற்போது இயற்றியுள்ள புதிய சட்டம் ஹொங்கொங் 50 ஆண்டுகளுக்கு அனுபவிக்கவேண்டிய அந்த சுதந்திர உரிமைகளைப் பறிப்பதாக இருக்கின்றது என்று சீனாவுக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன.

# இஸ்ரேலின் நடவடிக்கையால் பதற்றத்தில் பாலஸ்தீனம்!

பாலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பகுதிகளைத் தங்கள் நாட்டுடன் இணைக்கும் நடவடிக்கைகளில் இஸ்ரேல் அரசு இறங்கியிருக்கிறது.

இந்த நடவடிக்கை பாலஸ்தீனர்களுக்குக் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேலின் மிக நெருங்கிய நட்பு நாடான பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றன.

எனினும், ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு இஸ்ரேலின் இந்த இணைப்புத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கிறது. இந்த நிலையில் கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைப் பகுதியை இஸ்ரேலின் நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவருகின்ற முன்னெடுப்புகளில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

இஸ்ரே லின் இறையாண்மையை மேற்குக் கரையில் உள்ள யூதக் குடியேற்றங்களுக்கும், ஜோர்தான் பள்ளத்தாக்கு பகுதிக்கும் விரிவு படுத்துவது என்பதுதான் இந்த இணைப்பு நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

இதன்படி, ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை பகுதியில் கிட்டத்தட்ட 30 சதவீத நிலத்தை இஸ்ரேல் தன்னுடன் இணைத்துக் கொள்கிறது. இந்த இணைப்பு சட்டவிரோதமானது என்று ஐ.நா சபை கண்டனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

### 39 ஆண்டுகளுக்கு முன்னர்

# தந்தை திறந்த நினைவுக் கல்லை மீண்டும் திறந்து வைத்தார் சஜித்!



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்.ஜுலை 03

தந்தை ரணசிங்க பிரேமதாஸ திறந்து வைத்த நினைவுக் கல்லினை மகன் சஜித் பிரேமதாஸ திறந்து வைத்தார்.

1981 ஆம் ஆண்டு அப்போதய ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாஸாவினால் நெல்லியடியில் இராஜகிராமம் எனும் கிராமத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டதற்கான நினைவுகள் திறந்து வைக்கப்பட்டது.

அந்தக் கிராமதிற்கு பிரச்சாரத்திற்கு சென்ற சஜித் பிரேமதாஸ தனது தந்தை திறந்து வைத்த நினைவு கல்லினை மீண்டும் திறந்து வைத்தார்.

மேலும் அக் கிராமத்திற்கு அருகில் தனது தந்தையால் அமைக்கப்பட்ட குளம் ஒன்றினையும் பார்வையிட்டார்.

ரணசிங்க பிரேமதாஸாவினால் வழங்கப்பட்ட வீடுகள் தற்போது பழுதடைந்த நிலையில் இருப்ப தனை அப்பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இவ் தொடர்பில் தான் உரிய கவனம் செலுத்துவார் எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம - 11)

# மலர் தூவி சஜித்தை வரவேற்ற நெல்லியடி இராஜகிராம மக்கள்





(பிரபாகரன் டிலக்சன்)

நெல்லியடி இராஜ கிராம மக்கள் சஜித் பிரேமதாஸவை மலர் தூவி வரவேற்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டங்கள் நேற்றுக் கொற்றாவற்றை சித்தி விநாயகர் மண்டபம், நெல்லியடி இராஜகிராமம், தம்பசிட்டி இராஜசரஸ் வரி மண்டம் ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றன.

இதில் நெல்லியடி இராஜகிராமத்தில் தேர்தல் பிரச்சாரம் சென்ற போது அப் பிரதேச மக்கள் மலர் தூவி, சிரம் தாழ்த்தி வரவேற்பை மேற்கொண்டனர்.

இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதமர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் வடமாகாண இணைப் பாளர், இரான் விக்ரமரட்ண, மாவட்ட வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம - 11)

# புலிகளின் ஆயுதங்களைத் தேடி மாத்தளனில் நேற்று தோண்டுதல்

முல்லைத்தீவில் விடுதலை புலிகளின் ஆயதங்களைத் தேடி தோண்டும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது நிலத்தில் புதைக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆவணங்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

மாத்தளன் பகுதியில் தனியார் காணி ஒன்றில் வீடு ஒன்றிற்குள் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளன எனக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நீதிமன்ற உத்தரவிற்கு அமைய அந்தப் பகுதியில் தோண்டும் நடவடிக்கை ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது விடுதலைப் புலிகளின் இலச்சினைகள் பதிக்கப்பட்ட துண்டுகள் மற்றும் நிலத்தில் புதைக்கப்பட்ட துணிகள், தமிழீழ வரைபட புத்தகம், விடுதலைப் புலிகளின் வங்கியான வைப்பகத்தின் சிறுவர்களுக்கான தளிர் சேமிப்பு கணக்கு புத்தகம், ஒளிப்படங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன





# யாழில் உதைபந்து விளையாடிய சஜித்





(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,ஜுலை 03

யாழில் பிரச்சாரத்தின் இறுதியில் சஜித் பிரேம தாஸ உதைபந்து விளையாடினார்.

நெல்லியடி இராஜகிராமம் பகுதியில் நேற்றுத் தேர்தல் பிரசாரத்தில் பங்குபற்றிய சஜித் பிரேமதாஸ பிரசாரம் முடிவடைந்த தன் பின்னர் இளைஞர்களுடன் உதைபந்து விளையாடினார்.

தனக்கு மிகவும் பிடித்த விளையாட்டு உதை பந்து எனவும். தான் ஒரு உதைபந்து விளையாட்டு வீரன் எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம - 11)

# யாழ்ப்பாணத்தில் சஜித்தின் சில கூட்டங்கள் நேற்று ரத்து

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜுலை 03

யாழ் மாவட்டத்திற்கு வருகை தந்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் பிரதமர் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ பல இடங்களில் மக்களை சந்தித்து பேசுவதற்கு திட்டமிட்டிருந்தபோதும் சில இடங்களில் மக்கள் சந்திப்புகள் நடத்த முடியாமல் பிசுபிசுத்துப் போயின.

நேற்று முன்தினம் யாழ் மாவட்டத்துக்கு வருகை தந்த சஜித் பிரேமதாஸ சாவகச்சேரி, நல்லூர், தாவடி போன்ற பகுதிகளில் மக்கள் சந்திப்புகளை நடத்தினார்.

இந்நிலையில் நேற்றைய தினமும் பல இடங்களில் மக்கள் சந்திப்புக்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் இறுதியில் சில இடங்களில் மக்கள் சந்திப்புகளோ கூட்டங்களோ நடத்தப்படாமலே கைவிடப்பட்டது . இதனால் அந்தந்தப் பகுதிகளில் ஆவலுடன் காத்திருந்த மக்கள் ஏமாற்ற மடைந்தனர்.

குறிப்பாக வட்டுக்கோட்டை, மானிப்பாய், காங்கேசன்துறை போன்ற பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள் இறுதி நேரத்தில் மக்கள் அளவு குறைவாக இருந்தமையாலும் கால தாமதம் காரணமாகவும் ரத்து செய்யப்பட்டன.

சஜித் பிரேமதாஸவின் வருகையை முன்னிட்டு விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் மோப்பநாய் சகிதம் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த போதும் இறுதி நேரத்தில் அவை பிசுபிசுத்து போயின.

எனினும் ஏற்கனவே திட்டமிட்டபடி உடுப்பிட்டி ,நெல்லியடி,சாவல்கட்டு பகுதிகளில் கூட்டம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது .

# இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு ஆதரவாக நேற்று ஆர்ப்பாட்டம்





2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஆட்ட நிர்ணய சதி தொடர்பில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள், இந்நாள் வீரர்களிடம் விளையாட்டு தொடர்பான குற்றங்களை விசாரணை செய்யும் பிரிவு வாக்குமூலம் பெற்று வருகின்றது. இந்தநிலையில், இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு ஆதரவாக நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முன் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் இலங்கை கிரிக்கெட் அணி ஆதரவாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

## தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 115 ஆசனங்களைக் கைப்பற்றும்

### சுஜீவ சேனசிங்க நம்பிக்கை



நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 115 ஆசனங்களைக் கைப்பற்றும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

தேர்தலில் வென்ற பின்னர் புதிய யுகத்தை ஏற்படுத்துவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில ஊழல் அரசியல்வாதிகளின் அரசியல் பயணத்துக்காக மக்களில் சிலர் அடிமைகள் போல் செயற்பட்டு இனவாதத்தைத் தூண்டுகின்றனர்.

எனினும், மக்கள் இனவாதத்தையும் போலித் தேசப்பற்றையும் நிராகரிப்பார்கள். ஒரு தேசமாக செயற்படுவார்கள். காடையர்கள், கப்பம் பெறுபவர்கள், அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களைப் பொதுத்தேர்தலில் மக்கள் நிராகரிக்க வேண்டும்.

அரசியல்வாதிகளின் கௌரவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதற்காகவே ஜனாதிபதி ஆணைக்குழுக்களை உருவாக்கியுள்ளனர் - என்றார்.

## சர்வதேச பொறிக்குள் இலங்கை; சிக்கவைத்தது நல்லாட்சி அரசே!

### விஜயதாஸ ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 03

இலங்கையை சர்வதேச மட்டத்தில் நல்லாட்சி அரசே நெருக்கடிக்குள்ளாக்கியது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியமை தவறான செயற்பாடாகும்.

- இவ்வாறு முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பான பேச்சு இராஜதந்திர மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. அமெரிக்காவைப் பகைத்துக்கொள்ள வேண்டிய தேவையும், எமது நாட்டின் இறையாண்மையை விட்டுக் கொடுக்க வேண்டிய தேவையும் அரசுக்குக் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலைதுறைமுகத்தைக்கைவசப்படுத்தும் அடிப்படையிலே எம்.சி.சி. ஒப்பந்தம் அபிவிருத்திக்கான நிதி வழங்கல் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டது. நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள வேண்டிய தேவை தற்போதைய அரசுக்குக் கிடையாது.

கடந்த அரசு சர்வதேச நாடுகளுடன் ஏற்படுத்தியுள்ள



சிக்கல் நிலையை இராஜதந்திர மட்டத்தில் பேச்சுகளை முன்னெடுத்து தீர்வு காணவே முயல்கின்றோம்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் பெறும் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் நன்கு அறிவார்கள்.

இதன் காரணமாகவே இவர்கள் பொதுத்தேர்தலுக்கு எதிராக நீதிமன்றில் 11 மனுக்கல் தாக்கல் செய்தார்கள். அனைத்து சூழ்ச்சிகளையும் எதிர்கொண்டு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நிலையான அரசை அமைக்கும் - என்றார்.

## அரசுக்கான மக்களின் ஆணையை தடுக்கத் தேர்தல் ஆணைக்குழு சதி

### பின்புலத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதரகங்கள் எனக் குற்றம்சாட்டுகிறார் விமல்



கொழும்பு,ஜூலை03

தேர்தல்கள் ஆணைக்குழு ஓகஸ்ட் 5ஆம் திகதி வாக்களிப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முயல்கின்றது என அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றம்சாட்டினார்.

அரசுக்கு மக்களின் முழுமையான ஆணையில்லை எனக் காண்பிப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு முயல்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல்கள் ஆணைக்குழு சதித் திட்டங்களில் ஈடுபடுவதற்கான உத்தரவை இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதரகங்கள் வழங்கியுள்ளன.

இதன்மூலம் அரசுக்கு மக்களின் உண்மையான - முழுமையான - ஆதரவு கிடைக்கவில்லை என்று அந்தத் தூதரகங்கள் வெளிப்படுத்தும். எனவே, மக்களை புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த கால தேர்தல்களை விட இம்முறை அதிகளவிலானோர் வாக்களித்து கோட்டாபய ராஜபக்ஷவுக்கான ஆதரவை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

## மேலும் 12 பொலிஸார் கைது!

கைதுசெய்யப்பட்ட போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் 12 அதிகாரிகளை, வரும் 08ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது, கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரதடன இதற்கான உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பை பேணிய சந்தேகத்தில் குறித்த அதிகாரிகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில், பொலிஸ் பரிசோதகர் ஒருவர், உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உள்ளனர் எனக் குற்றப்புலனாய்வு திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், குறித்த சம்பவத்துடன் இதுவரை கைதுசெய்யப்பட்டவர்களில் 16 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொதுமகன் ஒருவர் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவர்களை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## மொட்டுக்காகக் களமிறங்குகிறார் கோட்டாபய அநுராதபுரத்தில் இன்று ஆரம்பிக்கிறது பிரசாரம்!

கொழும்பு, ஜூலை 03

அநுராதபுரத்தில் இன்று ஆரம்பிக்கப்படவுள்ள பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்ளவிருக்கிறார்.

இன்று முழு நாளும் - முற்பகல் 10 மணி முதல் இரவு 9 மணி வரை அநுராதபுர மாவட்டத்தில் பொது ஜன பெரமுனவின், சகல அமைப்பாளர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# எம்.சி.சி. குறித்து அமைச்சர்களின் கருத்துக்களை கோரும் ஜனாதிபதி

அமெரிக்கா நிறுவனத்துடனான எம்.சி.சி உடன்படிக்கை குறித்து அமைச்சர்கள் அனைவரையும் தங்கள் தனிப்பட்ட கருத்தினை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளாரென அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் எம்.சி.சி விடயம் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவித்த அவர், எம்.சி.சி உடன்படிக்கை குறித்து மீளாய்வுக் குழு சமர்ப்பித்துள்ள இறுதி அறிக்கையை அமைச்சர்கள் படித்துப் பார்க்கவேண்டும் என ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளாரெனக் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் அமைச்சர்கள் ஒவ்வொருவரையும் தங்கள் கருத்தைச் சமர்ப்பிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்நிலையில், இலங்கைக்கு பாதகம் விளைவிக்கும் எந்தவொரு உடன்படிக்கையிலும் அரசு எந்த நாட்டுடனும் கைச்சாத்திடாது என பந்துல குணவர்த்தன தெரிவித்தார். எனினும் இரண்டு நாடுகளுக்கு இடையிலான விவகாரம் என்பதால் எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுக்கின்றனபடிஎந்த ஒப்பந்தத்தையும் கிழித்தெறிய முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் தலைதூக்கவைக்க சஜித் கடும் முயற்சி

## இப்படிக் குற்றம்சாட்டுகின்றது மஹிந்த அணி

கொழும்பு, ஜூலை 03

தந்தையின் வழியில் செல்வதாகப் பிரசாரம் செய்யும் சஜித் பிரேமதாஸ அதிகாரத்துக்கு வந்த பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் தலைதூக்க வைக்கவே முயற்சிக்கின்றார். அதனை யாரும் அனுமதிக்கமாட்டார்கள்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.



வடகொழும்பில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையாக இதுவரை காலமும் மத்திய கொழும்பு இருந்தது. ஆனால், இம்முறை தேர்தலில் அதன் வரலாறு மாறப்போவது நிச்சயமாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து செயற்படும் சஜித் அணி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முயற்சிப்பதைவிட கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவின் அதிகாரத்தைக் கைப்பற்றவே முயற்சிக்கின்றது.

ரணசிங்க பிரேமதாஸ நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும் போது தமிழீழ விடுதலைப்புகளுக்கு ஆயுதம் வழங்கியதை ஐக்கிய தேசிய கட்சியினரே தெரிவிக்கின்றனர்.

அப்படியானால் சஜித் பிரேமதாஸ அதிகாரத்துக்கு வந்தால் தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் தலைதூக்க இடமிருக்கின்றது. அதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது.

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மேலும் சக்தி பெறச்செய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினராகிய நாங்கள் அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், நாங்கள் வெற்றி பெற்று ஆட்சியமைத்ததும் கடந்த காலங்களில் கொழும்பு நகரில் எங்களால் விடுபட்ட குடிசை வீடுகளை அகற்றிவிட்டு, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய வீட்டுத்திட்டங்களை ஏற்படுத்துவோம். அதன் மூலம் கொழும்பில் குடிசை வீடு என்ற நாமத்தையே இல்லாமலாக்குவோம் - என்றார்.

# சஜித், ரணில், அநுர தரப்புக்கள் படுதோல்வியடைவது நிச்சயம்!

## அடித்துக் கூறுகின்றார் ஆனந்த அளுத்கமகே

ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் படுதோல்வியடைவது உறுதியாகிவிட்டது என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தலில் அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைப்பது தற்போது உறுதியாகியுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கண்டியிலுள்ள தனது பிரசார அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் லக்ஸ்மன் கிரியெல்ல, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவைப் பொதுத்தேர்தலின் பின்னர் கைப்பற்றுவோம் எனவும், பொதுத்தேர்தலின் பின் தனித்து ஆட்சியமைப்பதே தங்களது நோக்கம் எனவும் கூறியுள்ளார். உண்மையில் அவரால் இம்முறை பொதுத் தேர்தலில் வெற்றிபெறவே முடியாது.

நான் கடந்த 4 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்தேன். ஆனால், எமது தொகுதி ஆதரவாளர்களுக்கும், மக்களுக்கும் என்னால் ஒரு இனிப்புக்கூட வழங்கமுடியாமல்போனது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு என்றாலும் மக்களுக்கான சேவையை வழங்க முடியாமல் தள்ளாடினேன். அந்த மன உளைச்சலை அடுத்தே நான் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இணைந்தேன்.

அரசிலிருந்து அனைத்து வரப்பிரசாதங்களையும்விட்டு மஹிந்த அணியில் முதலாவது இணைந்த நபர் நான்தான். எனவே, வரலாற்றில் எதிர்க்கட்சியே இல்லாத பிரதேச சபையாக கங்க இஹல பிரதேச சபை மாறியுள்ளது. அந்தச் சபையின் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி உறுப்பினர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்துகொண்டுள்ளனர்.

இந்தநிலையில், கலக்கமடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் பொதுத்தேர்தல் தோல்வியின் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து கொள்வார்கள்.

அதேபோல ஜே.வி.பியினரும் இம்முறை நடைபெறும் பொதுத் தேர்தலில் படுதோல்வியடைவார்கள் என்பது உறுதி - என்றார்.

# எல்லா மாவட்டங்களிலும் மொட்டுக்கே பெரு வெற்றி



## அடித்துக் கூறுகின்றார் முத்தையா முரளிதரன்

2020 ஒகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் அனைத்து மாவட்டங்களிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றி பெறும். எனவே, அந்த வெற்றியின் பங்காளர்களாக மலையக மக்களும் இணையவேண்டும் - என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

மஸ்கெலியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாரு:-

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் பதவியை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்னிடம் கேட்டுக்கொண்டார். ஆனால், அப்பதவியை ஏற்பதற்கு நான் மறுத்துவிட்டேன். இரு மாதத்துக்கு பின்னர் என்னை அழைத்து, பொதுத்தேர் தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுமாறு கோரினார். அந்த கோரிக்கையையும் நான் ஏற்கவில்லை. எனது சகோதரரை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டேன். அதன்பின்னரே பிரபு வேட்பாளராக களமிறங்கியுள்ளார்.

எதிர்வரும் ஆறு மாதகாலப் பகுதியில் மஸ் கெலியா பிரதேசத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்காக எனது சொந்த பணத்தில் கழகம் ஒன்றை அமைக்க உள்ளேன். அது மட்டுமின்றி ஹட்டன், ராகலை, ஹங்குராங்கெத்த, கொத்மலை ஆகிய பகுதிகளிலும் எமது கழகத்தை அமைக்க உள்ளேன்.

இதன் மூலமாக 40 ஆயிரம் பாடசாலை மாண வர்களின் கல்வி திறமையினை உயர்த்த என்னால் உதவிகளை வழங்கமுடியும். எனது சகோதரனை வெற்றிபெற வைத்தாலும், வைக்காவிட்டாலும் என்னால் வழங்கப்பட்ட உறுதிமொழியை நிச்ச யம் நிறைவேற்றுவேன்.

கண்டி மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டப்பகுதிகள் வளர்ச்சி கண்டுள்ளன. மஹிந்தானந்த அளுத் கமகே சிறப்பான சேவைகளை செய்துள்ளார். ஆனால், நுவரெலியா மாவட்டம்தான் அன்று போலவே உள்ளது. இதற்கு காரணம் பேசக்கூட தெரியாதவர்கள் நாடாளுமன்றம் செல்கின்றனர். இந்நிலைமை மாறவேண்டும். - என்றார்.

**மணமகள் தேவை**

1987( ஆண் V)
ரேவதி
8இல் சூரி/ செவ்
கி/ பா- 69
அலுவலகப்பணியாளர்

1986 ( ஆண் V)
திருவாதிரை
இல.செவ்
கி/ பா - 42 1/4
ஊடகவியலாளர்

1992 ( ஆண் V)
விசாகம்
8இல் செவ்
கி/ பா - 21
கனடா PR

1989 ( ஆண் V)
பூரட்டாதி
8இல் சூரி/ செவ்
கி/பா - 41
Bank officer

1989 ( ஆண்V)
விசாகம்
4இல் செவ்
கி/ பா - 30 1/2
Pion

1987 ( ஆண் V)
சதயம்
10இல் சூரி/ செவ்
கி/ பா - 19 1/2
பொறியியளாளர்
(குறுகிய காலத்துள்
விவாகரத்துப் பெற்றவர்)

**மணமகன் தேவை**

1990 ( பெண் V)
புனர்பூசம்
கி/பா - 39
முகாமைத்துவ உதவியாளர்

1977 ( பெண் V)
சுவாதி
கி/ பா - 23
உதவிமுகாமையாளர்-சமுர்த்தி

1991 ( பெண் V)
பரணி
2இல் செவ்
கி/ பா - 18 1/2
MBBS Doctor
(Doctor மணமகன் தேவை)

1992 ( பெண் V)
புனர்பூசம்
12இல் செவ்
கி/ பா - 29
BA பட்டதாரி

மேலதிக தொடர்புகளுக்கு -
இமயம் திருமணசேவை
Phone - 0779929047
Viber/ What's up -
+94777243129

# உண்மைகள் வெளிவரும்!

## – விசாரணையின் பின் சங்கா தெரிவிப்பு





விசாரணைகள் முடிவடைந்ததும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமேயின் குற்றச்சாட்டுகள் தொடர்பான உண்மைகளை அனைவரும் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும் என நான் நம்புகின்றேன்.

– இவ்வாறு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணைக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றுள்ளது என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் பகிரங்கமான குற்றஞ்சாட்டையடுத்து விளையாட்டு குற்றச்சாட்டுகள் தொடர்பான பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவு தொடர் வாக்குமூலங்களை முன்னெடுத்து வருகின்றது.

விளையாட்டு குற்றச்சாட்டுகள் தொடர்பான பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார, சுமார் 09 மணிநேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர், அங்கிருந்து வெளியேறினார்.

இதன்போது அங்கு நின்ற ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'ஐ.சி.சி. தலைவர் பதவிக்கு தங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா?' என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கிய அவர்,

இல்லை. அப்பதவிக்கு அவ்வாறு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. அதற்கு வேறு விதமான நடைமுறைகள் உள்ளன. எனினும், தற்போது நான் ஐ.சி.சி. தலைவர் பதவி குறித்து சிந்திக்கவில்லை. அதனைவிட முக்கியமான வேறு ஒரு விடயம் எனக்கு உள்ளது – என்றார்.

மேலும், குறித்த ஊடகவியலாளர், 'உங்களுக்கு ஐ.சி.சி. தலைவர் பதவி கிடைத்தால் ஏற்றுக்கொள்வீர்களா?' எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதில் வழங்கிய சங்கக்கார, இல்லை, எதனையும் செய்வதற்கு எனக்கு அதிக காலம் இல்லை. முதலில் எனக்கு இருக்கும் முக்கிய பொறுப்புகளை நான் சரியாக நிறைவேற்ற வேண்டும் – என்றார்.

# வெள்ளைக்கொடி விவகாரத்துக்கு ராஜபக்ஷ அரசே முழுப் பொறுப்பு!

## உண்மைகள் வெளிவர வேண்டும் என சந்திரிகா வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 03

இறுதிப் போரில் வெள்ளைக்கொடிகளுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள் எனவும், அதன்பின்னர் அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் எனவும் உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியில் இலங்கை அரசுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த விவகாரத்துக்கு ராஜபக்ஷ அரசே முழுப்பொறுப்பு. குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்காமல் நடந்த உண்மைகளை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இறுதிப் போரில் வெள்ளைக் கொடிகளுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் எவரும் இராணுவத்தினரிடம் சரணடையவில்லை என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ள நிலையிலேயே சந்திரிகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இறுதிப் போரில் நடந்த அனைத்துக் குற்றங்களுக்கும் இராணுவத்தினர் மீது மட்டும் பழிசுமத்த முடியாது. இராணுவத்தினருக்குக் கட்டளைகளை வழங்கிய அரச தரப்பினரும் இது தொடர்பில் பதிலளிக்க வேண்டும்; பொறுப்புக் கூறவேண்டும்.

அரசின் அனுமதியுடன்தான் வெள்ளைக்கொடிகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் சரணடைந்தார்கள் என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

எனவே, இது தொடர்பில் ராஜபக்ஷ அரசுதான் பொறுப்புடன் பதிலளிக்க வேண்டும் – என்றார்.

# புதுமணத் தம்பதியினருக்கு 85 ஆயிரம் ரூபா அபராதம்!

பொலிஸாரின் உத்தரவைப் பொருட்படுத்தாமல் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறி, மோட்டார் சைக்கிளில் பயணித்த மணமக்களுக்கு 85 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தெல்தெனிய மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

குறித்த புதுமணத் தம்பதியினர் கண்டி – மஹியங்கனை ஏ – 26 வீதியில் ஹுன்னஸ்கிரிய நகருக்கு அண்மையில் வீதி விதிகளை மீறி பயணித்துக் கொண்டிருந்தபோது, அவர்களைப் பின்தொடர்ந்து சென்ற பொலிஸார் குறித்த தம்பதியினரைக் கைதுசெய்துள்ளனர்.

தெஹியத்தகண்டிய பிரதேசத்தைச் சேர்ந்த இந்தப் புதுமணத் தம்பதியினர், தமது திருமண நிகழ்வு நிறைவடைந்ததன் பின்னர் இவ்வாறு ஊர்வலமாக மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

அத்துடன், இவ்விருவரும் சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்திருக்கவில்லை என்றும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இந்தநிலையில், எட்டு வீதி விதிகளைமீறியுள்ளனர்என்று பொலிஸாரால் 'பி' அறிக்கையின் ஊடாக நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, தெல்தெனிய மாவட்ட நீதிபதி ஈனக கலன்சூரிவினால் 85ஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

# மாங்குளத்தில் இளைஞர் மீது இராணுவத்தினர் தாக்குதல்!

## கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதி

முல்லைத்தீவு, ஜூலை 03

துணுக்காய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப்பகுதிக்கு ஆடு மேய்ப்பதற்குச் சென்ற இளைஞன் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து அவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் உறவினர்கள் தெரிவிக்கையில்,

மாந்தை பிரிவிற்குட்பட்ட பொன்நகர் ஒட்டங்குளம் பகுதியைச் சேர்ந்த இராசரத்தினம் தனுசன் என்ற 20 வயதுடைய இளைஞன் காட்டுப் பகுதிக்கு காலை ஆடு மேய்ப்பதற்குச் சென்றிருந்தார்.

இதன்போது அந்த இளைஞனை படையினர் தாக்கி காயப்படுத்தியுள்ளனர். வீட்டிலுள்ளவர்களுக்கு தகவல் வழங்குவதற்கு முற்பட்ட அந்த இளைஞன் மீது படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இளைஞனின் கைத்தொலைபேசி படையினரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் இரவு ஏழு மணியளவில் மாங்குளம் வன இலகா உத்தியோகத்தர்களிடம் இளைஞன் படையினரால் ஒப்படைக்கப்பட்டார்.

இதையடுத்து உறவினருக்கு தகவல் வழங்கப்பட்டு முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதையடுத்து நேற்று முன் தினம் இரவு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஆலங்குளம் எருவில் பகுதியிலுள்ள படையினரே தன்மீது தாக்குதல் நடாத்தியுள்ளதாகவும் அந்த இளைஞர் உறவினர்களிடம் தெரிவித்துள்ளார் .

### கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பழகிய மேலும் சிலரைக் கண்டறிய சுகாதார பாதுகாப்புத் தரப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

கப்பலில் பணிபுரிந்த நிலையில் இந்தியாவில் இருந்து வருகை தந்த மாலுமி ஒருவரே கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாக்கியிருந்தமை கண்டுபிடிக்கப் பட்டதையடுத்து கொழும்பு 13 , ஜிந்துப்பிட்டி வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த மாலுமி இந்தியாவிலிருந்து வருகை தந்ததையடுத்து 14 நாட்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். 14 நாட்களின் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப் பட்டது. இதையடுத்து வீடு திரும்பிய இவர் வீட்டில் மேலும் 14 நாள்கள் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டார்.

இந்தநிலையில், அந்தக் காலப்பகுதியில் இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது



### யாழ்.இந்துவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்கள் கூடி, தாக்குதல் நடத்தியவர்களை விரட்டிச் சென்ற போதிலும் எவரையும் பிடிக்க முடியவில்லை

சம்பவத்தையடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சி.சி.ரி.வி. பதிவுகளின் உதவியுடன் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 262 இலங்கையர் நாடு மீண்டனர்

கொழும்பு, ஜூலை 03

கொரோனா வைரஸ் தொற்று நோய் நிலைமை காரணமாக இலங்கைக்கு திரும்ப முடியாது தென் கொரியாவில் தங்கியிருந்த 262 இலங்கையர்கள் பாதுகாப்பாக நாடு திரும்பியுள்ளனர்.

அழைத்து வரப்பட்டுள்ள இந்த இலங்கையர்கள் தென் கொரியாவுக்குத் தொழில் நிமித்தமாக சென்றிருந்தவர்கள்.

தென் கொரியாவின் சியோல் நகரில் இருந்த இவர்கள் ஸ்ரீலங்கன் விமான சேவையின் யு.எல்.471 என்ற விசேட விமானத்தின் மூலம் நேற்று மாலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்நிலையில், விமான நிலையத்தில் இருந்து வெளியேறிய பின்னர் இவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

### தமிழகத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பி வந்தவரால் வேலணையில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதி மக்ககள் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து சம்பந்தப்பட்ட நபரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தொடர்ந்து அங்கு வந்த சுகாதார அதிகாரிகள் தமிழகத்தில் இருந்து தப்பி வந்த நபரை தனிமைப்படுத்திக் கண்காணித்து வருகின்றனர்.

வேலணை 2 ஆம் வட்டாரத்தைச் 29 வயதான ஒருவரே விசாரணைகளின் பின்னர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

தீவிகப் பகுதிகள் தமிழகத்தில் இருந்து மிக அண்மையில் இருப்பதால் இங்கு மேலும் பலர்தப்பி வரக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு தப்பி வரும் நபர்கள் தனிமைப்படுத்தப்படாமல் இரகசியமாக சமூகத்தில் நடமாடினால் கொரோனா தொற்று நோய் பரவக் கூடிய ஆபத்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இவ்வாறு சட்டவிரோமாக வருபவர்களைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என தீவகப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, இவ்வாறு தமிழகத்தில் இருந்து தப்பி வரக்கூடியவர்களால் ஏற்படக் கூடிய ஆபத்துக் குறித்து ஏற்கனவே வட பிராந்திய சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தேரேறி வருகிறாள் அன்னை நாகபூசணி!

**வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு அருள் மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா தினத்தையொட்டி இச் சிறப்பிதழ் வெளிவருகிறது.**



ஈழமணித் திருநாட்டின் பழம்பெரும் அம்மன் கோயில், 64 சக்தி பீடங்களில் இது, புவனேஸ்வரி பீடமாக திகழ்கின்றது. காளிதாசரால் வணங்கப்பட்ட தலங்களுள் இதுவும் ஒன்று, அம்மன் சுயம்புவாக தோன்றிய திருத்தலம், தலபுராணச் சிற்பங்கள் நிறைந்த சித்திரத் தேர் கொண்ட கோவில் என பல்வேறு சிறப்புகள் கொண்டு விளங்குவது, நயினாதீவு ஸ்ரீ நாகபூணி அம்மன் திருக்கோயில். இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூணி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்றாகும். அல்லற்படும் அடியவர்களுக்கு அன்னை அழகிய தேரில் ஆரோகணித்து அருள் பாலிக்கும் நாள் இது.

ஆகம மரபுக்குட்பட்ட முறையில் அமைந்து விளங்கும் இவ்வாலயம் கருவறைக்குள் நிமிர்ந்து காணப்படும் கருநாகச் சிலை வடிவமும், அதன் கீழ் உள்ள அழகிய பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் அருவுரு வடிவமான அம்பாளின் திருவுருவும் சுயம்புருவங்களாகவே உள்ளன. அம்பாளின் காற்சிலம்பு விழுந்த புவனேஸ்வரி பீடமாக இவ்வாலயம் கருதப்படுகிறது. நாகபாம்பு பூக்கொண்டு வந்து பூஜித்த வழிபாட்டுச் சிறப்பு மிக்க தலமாக இது விளங்குகின்றது.

ஆதியில் நாகர்களின் முக்கிய வழிபாட்டுத்தலமாகக் காணப்பட்டுப் பின்னர், நாகபூசணி அம்மன் திருக்கோயிலாக மாற்றம் பெற்ற தலமே, நயினாதீவு ஸ்ரீ நாகபூணி அம்மன் ஆலயமாகும். இக் கோயிலின் கருவறையிலுள்ள சீறும் ஐந்தலை நாகச்சிலை, எண்ணாயிரம் ஆண்டுகள் பழமையானதென ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஈழத்திலே காணப்படும் பெரும்பாலான கோயில்கள். ஐதீகம் மற்றும் புராணக் கதைகளோடு மட்டும் தொடர்பு கொண்டவையாகக் காணப்படும் போது, நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம், பல்வேறு தொடர் புகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. வரலாற்றுக் குறிப்புகள், சாசன ஆதாரங்கள், தமிழ் இலக்கியத் தொடர்புகள், கர்ண பரம்பரைக் கதைகள், புராண வரலாறுகள் எனப் பல்வேறுபட்ட தொடர்புகளையுடையதாக விளங்கும் சிறப்புப் பெற்றது இவ்வாலயம்.

நயினாதீவுக்கு அருகில் உள்ள புளியந்தீவில் இருந்த நாகமொன்று, அம்மனைத் தரிசிக்கத் தினந்தோறும் கடலில் நீந்தி வருவது வழக்கமாக இருந்தது. அவ்வாறு வரும் போது, அம்மனுக்கு அர்ச்சனை செய்ய, புளியந்தீவில் இருந்து பூக்களை கொண்டு வருவதும் வாடிக்கை. ஒருநாள் வழக்கம் போலப் பூக்களுடன் நீந்தி வந்த நாகத்தை, கருடன் ஒன்று உணவாக்க முயன்றது. இதனால் பதறிய நாகம், கடலில் எழும்பி நின்றிருந்த கற் பாறை ஒன்றில் ஒதுங்கியது. அந்த இடத்திற்கு வந்த கருடனுக்கும், நாகத்திற்கும் இடையே சண்டை ஏற்பட்டது.

அந்த நேரத்தில், வாணிகம் செய்வதற்காக காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து, கப்பல் மூலம் இலங்கை சென்று கொண்டிருந்த மாநாயக்கன் என்ற வணிகன். அவன் நாகத்தை கருடன் கொல்ல முயல்வதைக் கண்டு மனம் இரங்கினான். நாகத்தை காப்பாற் றும் நோக்கில் கருடனிடம், 'நாகம் அம்மனை வழிபடும் நோக்கத்தைத் தடுக்க வேண்டாம்' என்று வேண்டினான்.

அதற்கு கருடன், 'ஐயா! அம்மன் மீது உமக்கு பக்தி இருக்குமானால், கப்பலில் உள்ள உன் பொருள் கள் அனைத்தையும் அம்மன் ஆலயத்திற்குத் தர சம்மதம் சொல்வீரா?. அப்படி நீர் ஒப்புக் கொண்டால், நானும் உமக்காக இந்த நாகத்தை விட்டு விடுகி றேன்' என்றது.

கருடனின் சவாலுக்கு வணிகன் ஒப்புக்கொண்டான். தான் கப்பலில்கொண்டுவந்தபொருள்களை எல்லாம் கோவிலுக்கு வழங்கி விட்டான். இதனால் நாகம் விடுதலை பெற்று, வழக்கம்போல அம்மனை வழிபட்டது. வணிகன் கொடுத்த பொருள்களைக் கொண்டு கோவில் அழகா கவும், சிறப்பாகவும் கட்டமைக்கப்பட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இது இத்தலம் குறித்து கூறப்படும் கர்ண பரம்பரைக் கதையாகும். நயினா தீவின் அருகே பாம்பு சுற்றிய கல் இருப்பதையும், கருடன் கல் இருப்பதையும் இன்றும் காணலாம்.

வரலாற்றுப் பெருமையும், வழிபாட்டுச் சிறப்பு மிக்க இவ்வாலயம் அந்நியர் ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். அதன்பின்னர் இவ்வாலயம் 1788 இல் கற்களிலான கட்டிடமாக உருப்பெற்றது. 1935 ஆம் ஆண்டு கிழக்கு வாயில் இராஜகோபுரம் கட்டப்பட்டது. இவ்வாலயத்தின் விமானம் 1951 ஆம் ஆண்டு அழகாக அமைக்கப்பட்டுள்ளது. வெளியில் நுழைவாயில் கிழக்கு நோக்கிய வாயிலையுடைய 108 அடி உயரமான நவதள நவகலச இராச கோபுரத்திற்கு 2012 ஆம் ஆண்டில் மகாகும்பாபிகேம் நடைபெற்றுள்ளது. இவ்வாலய மகோற்சவம் ஆனிப் பூரணையை தீர்த்தோற்சவமாகக் கொண்டு நடைபெறுவது வழக்கமாகும். ஆரம்பத்தில் பத்து நாள்களே மகோற்சவம் நடைபெற்றது. 1960 ஆம் ஆண்டிலிருந்து பதினைந்து நாள்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது.

இவ்வாலய வழிபாட்டு மரபுகளில் பூரணைதோறும் இடம் பெறும் ஸ்ரீசக்ரபூஜையும், திருமணம் மற்றும் குழந்தைப்பேறு என்பவற்றிற்காகச் செய்யப்படும் நாகசாந்தியும் நாகப் பிரதிஷ்டையும் முக்கியமானவையாக விளங்குகின்றன. வன்னியும், வேம்பும் இவ்வாலயத்தின் தல விருட்சங்களாக விளங்குகின்றன.

கருவறையில் அமைந்துள்ள சுயம்பு நாகபூணி அம்மன், நீள் உருளை வடிவத் திருமேனியராக எழிலாக காட்சி தருகின்றாள். என்றாலும், அலங்காரத்தால் அன்னையின் முகம் மட்டுமே காட்சியளிக்கிறது. பின்புறம் சீறும் நாகமாக ஐந்து தலை நாகம் உள்ளது. இத்திருமேனிகள் பழமையானவை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இக்கோயிலின் திருவிழாக் காலங்களில் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் திரள் திரளாக வந்து கூடுவர். கோயிலில் பகல் மற்றும் இரவு நேரத்தில் அன்னதானம் கொடுக்கப்படும். அநேகமாக வெகு தொலைவில் இருந்து இக்கோயிலுக்கு வரும் பக்தர்களில் இங்கு தங்கிச்செல்வோரே அதிகம். இதனால் தொலைவில் இருந்து வருவோரின் நலன் கருதி கோயிலில் தங்குவதற்கான தங்குமிட வசதிகள் உள்ளன. தமிழர் மட்டுமன்றி தென்னிலங்கை சிங்களவர்களும் இக்கோயிலுக்கு வந்து செல்வர்.

அனுசரணை :




























இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.07.2020 இல் வெளியிடப்பெற்றது.